# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 24

பண்பாட்டுக் கழக வெளியீடு (உறுப்பினர்களுக்கு மட்டும்)

## 9 கோள்கள் பற்றிய உண்மையான வரலாறு

## அருள்மிகு ஐயப்பன் சிறப்பு மலர்



*சபரி[யின்] மலையில் சமாது கொண்ட அருள்மிகு ஐய்யப்ப பண்டாரம்*

**"இரண்டாம் ஆண்டின் நிறைவு மலர்"**

**காணிக்கை:- ரூ 1-00** *வெளியீடு;-* **26—12—85**



# எத்தனை ஐயப்பன்கள்!

—இந்துமதத் தந்தை—

திரேதகா யுகத்தின் நாயகரான சித்தர் காகபுசுண்டர் பரம்பரையில் தோன்றிய யக்ஞ வல்லியின் குருவாக விளங்கிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு கபாடபுரத்துக் கருவூறார் ஏழாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, அயோத்தித் தசரத இராமன் வேண்டுகோளால் "வேடுவ குலத்துத் தவமூதாட்டி சபரி, தீப்புகுந்து எரிந்த யக்ஞ குண்டத்தின் மீது கட்டிய சமாதின் சக்தி வழங்கு அருளூற்றுத் தான் சபரிமலை" இச் சபரிமலையின் அருளூற்றுக் காப்பாற்றப் பட: அக்காலத்து அருளாட்சியில் முதன்மை பெற்று விளங்கிய பதினெட்டாம்படிக் கருப்புகள் அருவுருவ சமாதியாயினர் அத்துடன், காலங்கள் தோறும் சித்தி முத்தி பெறும் ஐயனார்களில் விருப்பமுள்ளவர்கள் இந்தச் சபரிமலையில், பதினெட்டாம்படிக் கருப்புகளின் அருட்கோட்டத்தில் சமாது ஆகி இந்துமத மலர்ச்சிக்கும வளவளர்ச்சிக்கும் உறுதுணையாகிடும் திட்டமும் அறிவிக்கப் பட்டது. எனவே, சபரிமலையில் காலங்கள் தோறும் பல ஐயனார்கள் சமாது ஆகி வருகிறார்கள்

அவர்களில் ஒருவரே சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் கேரள நாட்டுப் பந்தள மன்னனின் திருமகன் ஐயப்பன். இவன், கருவில் திருவுடையானாகத் தோன்றிச் சித்துக்கள் விளையாடித் தனது பதினாறுவது வயதில் ஞானமுதிர்ச்சி பெற்றான். இவனுக்கு அருவுருவ சித்தியும் முத்தியும் கிடைத்ததால்; இவன், சூரிய குலத்துக்குரிய சித்தர் காகபுசுண்டரின் வாரிசுகளையும் சந்திர குலத்துக்குரிய சித்தர் கருவூறாரின் வாரிசுகளையும் சந்தித்து முறைப்படி குருவருளும் திருவருளும் சித்தி செய்து கொண்டான் பிறகு கலியுகத்தில் இந்துமத மறுமலர்ச்சிக்காகவும்: பத்தி இயக்கப் புத்தமைப்புக்காகவும்: அருளுலகக் குரு நிலை மாணுக்கநிலை விளக்கத்துக்காகவும்:... ... மூன்று யுகங்களாகச் சிறந்த அருளூற்றாக இருந்து வரும் சபரியின் சமாது அருகிலும், பதினெட்டாம்படிக் கருப்புகளின் அருட் கோட்டத்துள்ளும் அருவுருவ சமாது நிலையை நிறுவினான். இவன் கலியுகத்தில் ஆண்டுக்கொரு முறை அருள் வழங்கு பண்டாரமாக விளங்கிட அருளுலகத்தார் ஒப்புதல் வழங்கினார்கள் அதுவும், இந்து மத ஆண்டு பிறக்கின்ற தை மாதத்தின் முதல் வாரத்தோடு இப் பண்டாரப்பணிவு நிறைவுற்று: மீண்டும் ஐயப்பன் அருவுருவ சமாதியில் நிறைந்திடல் வேண்டும். ஐயப்பன் பண்டார நிலை பெறக் கார்த்திகை மாதத் துவக்கம் முதல் பத்தர்கள் பூசை செய்து, வருந்தி, அரற்றி, பாடுகிடந்து, தொழுது, புலம்பி, ஆடிப்பாடி, கூப்பாடு போட்டுக் கும்பிட்டுத் தவ நிலைகளை வெற்றியுறச் செய்ய வேண்டும். சிவநிலைக்குரிய கார்த்திகை மாதமும், திருமால் நிலைக்குரிய மார்கழி மாதமும் பத்தர்களின் தவநிலை மாதங்கள். பிறமண் - [பிற + மண் —> இம் மண்ணுலகின் பிறப்புக்களுக்குப் பொறுப்பாக உள்ள படைப்புக் கலைஞான பிற மண்] நிலைக்குரிய தை மாதத்தின் முதல்வாரமே ஐயப்பன் அருள்வழங்க பண்டாரமாகச் செயல்படும் நன்னாட்கள் "ஐயப்பன் அருள் வழங்கிடல் அறுபத்து நான்கு நாள்" - என்ற குருபாரம்பரிய வாசகம் மேற்படி விளக்கங்களின் சாரம்.

குறிப்பு: " பிறமண் நிலைபெற்ற ஐயப்பன், முத்தையா, இலாடசன்னாசி கருப்பண்ணசாமி வீரன், சூரன், கங்காணி, காராளன், பகவன்............ஐயம்மாள், முத்தாளம்மாள், கருப்பாயி, வீரம்மாள், சூரம்மாள், கங்காணியம்மாள், காராளச்சி, பகவதி, மாரி, காளி [மாரியப்பன், காளியப்பன்] .... முதலிய வழிபடு நிலையினர்கள் தைமுதல் வைகாசி முடிய அருள் வழங்கு பண்டார நிலையினராகிறார்கள்"—குருபாரம்பரியம்

தொடர்ச்சி 11-ம் பக்கம்

# சுடுகாட்டில் வழிபாடு செய்யும் பத்தி இயக்கம்

இந்தியா முழுவதுமுள்ள 'இந்துமதம்' கங்கைக் கரையிலோ, யமுனைக் கரையிலோ இமயத்திலோ பிறந்து தெற்கு நோக்கி வந்ததல்ல! தென்னிந்தியாவில் திராவிட நாட்டில் கடலுள் மறைந்த தமிழகத்தில்......பிறந்த இந்துமதமே வடக்கேயும், மேலையநாடுகளிலும் கீழைய நாடுகளிலும் பரவிற்று.

இந்துமதத்தின் முழுமுதற்கடவுள் சிவன், அவன் துணைவி சத்தி, மகன்கள் குமரன், விநாயகர்,[கணபதி, பிள்ளையார்.] மைத்துனர்திருமால், அவர் துணைவிகள் திருமகள், நிலமகள், மகன் பிறமண், மனைவி கலைமகள், மகன் நாரதர் ஐயப்பன்...எனப்படும் கடவுள்கள் தென்னாட்டவர்களே! இவர்கள்பேசியதுதமிழே!

மேற்படி இந்துமதம், பத்தி இயக்கமாக; அதாவது, ஏட்டுச் சுரக்காயாகத் தத்துவ வடிவிலிருந்த இந்துமதம் செயல்வடிவில் சித்தாந்தமாக மாறியபோது;அறு-பதது நான்கு திருவிளையாடல்கள் நிகழ்ந்தன. இவற்றினடிப்படையில் தோன்றிய அறுபத்து மூன்று நாயன்மார்களும் பன்னிரண்டு ஆழ்வார்களும் பத்தி இயக்க வடிவமும் வாழ்வும் ஆவார்கள்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் முதல்வரான காரைக்காலம்மையார் **பேய்** வடிவம் பெற்றார் என்று குறிக்கப்படுகின்றது• பன்னிரண்டு ஆழ்வார்களில் முதல் மூவரும் இயற்பெயரே தெரியாதவாறு "பொய்கையார் பூதத்தார்." பேயார் [பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார்] என்றே அழைக்கப்படுகிறார்கள். இவற்றின் பொருளென்ன?

இப்படிச் சைவசமய எழுச்சியின் மூலவரும் வைணவ சமய எழுச்சியின் மூலவரும் சுடுகாட்டுக்குரிய பேயாக,பூதமாக,பொய்யுருவாக[அருவம்] மக்களால் கருதப்பட்டது ஏன்? இம்மூவரும், **சுடுகாடே இறைவன் திருநடனமிடும் மன்றம்** என்று கண்டுணர்ந்து கூறினார்கள் **'கல்லறைகளே இறையருள் ஊற்றெடுக்-கும் கருவறைகள்'** என்ற பேருண்மையை வெளிப்படையாகக் கூறியவர்களே மேற்படி மூவரும்.

சித்தர்கள். மனிதன் கடவுளாகிச் சமாது ஆகின்ற கருவறைகளையே அருள் ஊற்றுக்களாக மாற்றினார்கள். எனவேதான், சித்தர்நெறி, சுடுகாடு, புதைகாடு இடுகாடு, நன்காடு, படுகாடு, விடுகாடு...... என்று 18 வகைக் காடுகளிலும பூசைகளைச் செய்து அருளை அனுபவப் பொருளாகப் பெறுவதையே பத்தி இயக்கமாக'இந்து மறுமலர்ச்சி இயக்கமாகக்' காலங்கள் தோறும் செயல்வடிவம் பெறச் செய்துள்ளார்கள்.

'ஆரம்பமே முடிவு' 'முடிவே ஆரம்பம்' 'ஆதியந்தமற்ற பொருளே இறைவன்' என்ற தத்துவத்தைக் காரைக் காலம்மையாரும், பொய்கையாழ்வாரும், பூததாழ்வாரும் பேயாழ்வாரும்..... சுடுகாட்டுப் பூசைகளின் மூலம் இந்துமத மறுமலர்ச்சிப் பணியை அணி பெறச் செய்தனர்.

---

தொடர்பு; சி. கவிக்குமார் தலைமைப் பொறுப்பாளர்,
56, NGO காலனி, பொன்னேரி-601204.

# பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதம் (ஒன்பது கோள்கள்பற்றியஉண்மைகள்

| கிரகம்/கோள் | தானியம் | எண்ணெ | பருப்பு | கல் | வண்ணம் | பூ | பயன் |
|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு சூரியன் | மூங்கிலரிசி | உயிரினக் கொழுப்பு எண்ணெ | அவரை | வைரம் பல வண்ணம் | பால்போன்ற வெண்மைபல வண்ண ஒலி | வெண்ணிற பூ | ஆன்மா,முன்னோர் நலம், பொலிவு,செயல்வெற்றி, |
| திங்கள் சந்திரன் | பச்சரிசி | தேங்கா எண்ணெ | துவரை | முத்து | ஊதா மந்தவெண்மை | ஊதா வண்ணப்பூ | தாய்நலம், அறிவு, யோகம், சிறப்புறல் |
| செவ்வாய் அங்காரகன் | சோளம | கடலை எண்ணெ | 'மொச்சை | பவழம் | குருதிச் சிவப்பு | சிவப்புப்பூ | உடன்பிறந்தார் நலம், நிலபுலன், துணி, வீரம் |
| புதன் | கம்பு | புங்க எண்ணெ | தட்டைப் பயறு | பச்சை | கரும்பச்சை | பச்சை வண்ணப்பூ | கலை, உறவு, பெண், அறிவு, |
| வியாழன் குரு | தினை | நெய் | உளுந்து | கோ மேதகம் | மஞ்சள் | மஞ்சள் பூ | புகழ் செல்வம், கல்வி, வாரிசு, உடல் நலம் |
| வெள்ளி சுக்கிரன் | குதிரை வல்லி | இலுப் பெண்ணெ | வேர்க் கடலை | மாணிக்கம் | இளஞ்சிவப்பு | இளஞ் சிவப்புப் பூ | மனைவி அணிகலன், வாகனம், கரு |
| சனி | சாமை | நல்லெண்ணெ எள் எண்ணெ | முக்குக் கடலை | நீலம் | கருப்பு நீல வண்ணம் | கருப்புப் பூ | ஆயுள், துணைவி, நண்பர், கரு |
| இராகு பெண் | கேழ்வரகு | வேப் பெண்ணெ | கொள்ளு | புட்பராகம் பூவோசை | வெளிர் ஊதா | வெளிர் ஊதாப்பூ | ஞானம், பேரின்பம், குரு |
| கேது ஆண் | கோதுமை | ஆமணக்கு எண்ணெ [விளக், செண்ணெ] | பாசிப் பயறு | வைடூரியம் கெம்பு | இளங்கருப்பு | இளங் கருப்புப்பூ | தொழில், திரு ஞானயோகம் |

தும்பை, அருளி[ அரளி] செம்பருத்தி மருக் கொழுந்து, மல்லி, முல்லை, தாமரை, அல்லி, நீலம், தவனம், செண்பகம், வேங்கை, வாகை, அவரை, ஆவாரை, [அருகு, துளசி, வில்வம்] காந்தல், நந்தியாவட்டை, சங்கு, தாழம்பூ [மிகச்சிறப்புற்றது] கொன்றை பன்னீர் முதலியவை பொதுவாகப் பூசையில் பயன்படுபவை, தாழம்பூவை பூசையில் பயன் படுத்தாமல் செய்தது, ஆரியச் சூழ்ச்சியே! இவைகள் சித்திக்குரியன.

# பொய்யான ஹிந்து மதத்தின் தவறான பட்டியல்

| கிரகம்/கோள் | தானியம் | எண்ணை | பருப்பு | கல் | வண்ணம் | பூ | பயன் |
|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு சூரியன் | கோதுமை | இல்லை | இல்லை | மாணிக்கம் | சிவப்பு | இல்லை | பித்ருப்பிராபவம், தேஜோசக்திஆத்மபலம் |
| திங்கள் சந்திரன் | பச்சரிசி | ,, | ,, | முத்து | மந்தமான வெண்மை | ,, | மாதா.புத்தி அதிருஷ்டாவிருத்தி |
| செவ்வாய் அங்காரகன் | துவரை | ,, | ,, | பவழம் | ரத்தச் சிவப்பு | ,, | சகோதரன்தைரியம் நிலபுலன்,பராக்கிரமம் |
| புதன் | பச்சைப் பயறு | ,, | ,, | பச்சை | கரும்பச்சை | ,, | வித்யை,பந்து,சுகபோகங்கள்,மாதுலன்,விவேகம் |
| வியாழன் குரு | கடலை | ,, | ,, | புஷ்பராகம் | மஞ்சள் | ,, | புகழ், செல்வம், உடல் நலம்.மக்கள் |
| வெள்ளி சுக்கிரன் | மொச்சை | ,, | ,, | வைரம் | தூய வெண்மை | ,, | பத்தினி,பாத்தா,வாகனம்,அணிகலன்,இன்பம் |
| சனி | எள் | ,, | ,, | நீலம் | மைக்கருப்பு | ,, | ஆயுள்,சம்பாத்தியம் |
| இராகு பெண் | உளுந்து | ,, | ,, | கோமேதகம் | லேசான கருப்பு | ,, | மோக்ஷம், ஞானம் |
| கேது ஆண் | கொள்ளு | ,, | ,, | வைடூரியம் | சிவந்தகருமை | ,, | ஞானம் தொழில் |

 தொகுத்தவர் : விஷ்ணுப்ரேமி, சென்னை-33.

# கேள்வியும் நானே........! பதிலும் நானே........!

* 'பூசைகளில் தாழம்பூவைப் பயன்படுத்தக் கூடாது?' என்ற கருத்துச் சரியானதா? உண்மையானதா? பயன் உள்ளதா?
பதில்:- மெய்யான இந்து மதத்தின் கருத்துக்களையும் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் செயல்நிலைகளையும் பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்கள் எண்ணற்ற சூழ்ச்சிகளைச்செய்துதான்சிதைத்து,சீரழித்து. பயனற்றதாக ஆக்கினார்கள் அதாவது பொய்யான ஹிந்து மதத்தை உண்டாக்கினார்கள். இக் கருத்தின் விளக்கமாகதான் அல்லது சான்றுகத்தான் தாழம்பூவைப் பூசையில் பயன்படுத்தாமல் தடுத்த செயல். எனவே, இதற்காகக் கூறப்படும் புராணம் தவறானது.]

*· பதினெண் சித்தர்களின் பூசாவிதிகள், மரபுகள், படிகள், ஒழுகலாறுகள், ஓச்சுகள்;வீச்சுகள், சாத்திரங்கள். சாத்திறங்கள். சாத்தரங்கள், நூல்கள்...... முதலிய அனைத்திலும் சித்திக்குரிய மஞ்சள் வணணப்பூ = தாழம்பூ, அருளி( அரளி), சிவப்பு பூ = செம்பருத்தி, தாமரை, அருளி பச்சைப்பூ = மருக்கொழுந்து, தவனம்(தவம்), கதிர்பச்சை, வெள்ளைப்பூ-நந்தியாவட்டை; பன்னீர் மல்லி, முல்லை......... பச்சை இலை;— வில்வம், துளசி, வேப்பிலை; பழுப்பு இலை:— பால் வடியும் மரங்களின் பழுப்பு இலை, பலா, மா, ஆல், அரசு.........என்று மிகத்தெளிவாகச் செய்திகள் உள்ளன இவற்றில், சித்திக்குரிய தாழம்பூவினைப் பூசையில் பயன்படுத்த விடாமல் தடுத்துக் கெடுத்ததன் மூலமே பிருமணர்கள் மெய்யான இந்து மதத்திற்கு மிகப்பெரிய நலிவையும், மெலிவையும், அழிவையும். செயற்குறைவையும், உருவாக்கி விட்டார்கள்! உருவாக்கிவிட்டார்கள்!! உருவாக்கிவிட்டார்கள்!!! எனவே, அருளை அனுபவப் பொருளாக விரைந்து அடைவதற்கும் மெய்யான இந்து மதத்தின் மறுமலர்ச்சிக்கும் அடிப்படையாக அனைவரும் தாழம்பூவை பூசையில் பயன்படுத்த வேண்டும்.

* ஒன்புது கோள்கள்[ நவக்கிரகங்கள் ]ஏன்?எப்பொழுது? எதற்காக? ஆளுக்கொரு திசையில் திரும்பிக் கொண்டு இருக்கின்றன?
பதில்:- மெய்யான இந்து மதம் என்று ஒன்று உண்டு; பொய்யானஹிந்துமதம் என்று மற்றொன்று இருக்கின்றது என்ற பேருண்மையை விளக்குகின்ற சான்றுகளில், ஊன்றுகளில். இந்த ஒன்பது கோள்களும் ஒரே நேர் கோட்டில் இருந்தநிலையை மாற்றி ஒவ்வொன்றும் வெவ்வேறு திசையில் பார்க்கும்படி செய்யப்பட்டிருப்பதுதான்; பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வட ஆரியர்கள் மெய்யான இந்துமதத்தை சிதைப்பதில்; செயலற்றதாக ஆக்குவதில்; பயனற்றதாக ஆக்குவதில் பெற்ற மாபெரும் வெற்றி இதனால்தான் ஒன்பது கோள்களும் வெவ்வேறு திசையில் இருக்கின்றன.

* அண்ட பேரண்டங்களிலிருந்து இந்த மண்ணுலகிற்கு வந்த பதினெண் சித்தர்கள் இம் மண்ணுலகின் பயிரினங்களையும், உயிரினங்களையும ஆட்சி செய்கின்ற ஒன்பது கோள்களும் ஒரே நேர்கோட்டில் தான் இருக்கின்றன என்ற பேருண்மையினை அடிப்படையாகக் கொண்டு தான் ஒன்பதுகோள்களுக்காக அமைக்கின்றபீடங்களையும்சிலைகளையும், ஓம குண்டங்களையும் ஓக குண்டங்களையும். யாக குண்டங்களையும், யக்ஞ குண்டங்களையும், வேள்வி குண்டங்களையும் ......,...... ஒரே நேர்கோட்டில் அமைத்து வழிபடும் பூசை முறைகளையும், மறைகளையும், வேதங்களையும் சித்தாந்தங்களையும் நாதங்களையும் போதங்களையும் ஓதங்களையும் படைத்தார்கள். ஆனால் தமிழர்களின் மெய்யான இந்து மதத்தை சிதைத்து, சீரழித்து செயலற்றதாக ஆக்கினால் தான்; தாங்கள் இந்துமதத்துக்குரிய நாடான இந்தியாவில் வாழ முடியும் என்று முடிவு செய்த பிருமணர்கள் மெய்யான இந்து மதத்தின் உயிர் நாடியான ஒன்பது கோள்களின் பூசைகளைப் பயனற்றதாக ஆக்கிடுவதற்காக அவை ஆளுக்கொரு திசையில் பார்த்துக் கொண்டிருக்கும் படி சதுர வடிவில் அமைத்தார்கள். இதனை மாற்றுவதற்காகவே 10-வது 11-வது பதினெண் சித்தர் பீடாதிபதிகள் ஒன்பது கோள்கயும் நேர் கோட்டில் அமைத்தும் வட்டவடிவில் அமைத்தும் மறுமலர்ச்சி செய்துள்ளார்கள் இதனை புரிந்தும் புரியவைத்தும் செயல்படுங்கள்

# திருவள்ளுவரின் கடவுட் கொள்கை - 1


அதாவது பல பெண்களுடன் வாழுதல். இறைச்சியுணவு உண்ணுதல், பலி கொடுத்துப் பூசை செய்தல் பல தெய்வங்களை வணங்குதல், மது வகைகளைப் பருகுதல், களியாட்டங்களில் ஈடுபடுதல், காமம் மிகுந்து வாழுதல் பொருளாசையோடு வாழுதல்.........முதலியவைகளையெல்லாம் திருவள்ளுவர் கண்டிக்கிறார் என்று கருதத் தேவையில்லை இக் கருத்துக்கள் நவநாத சித்தர்களுக்கே உரியவை.

திருமூலரின் சமயக் கருத்துக்களில் பல பதினெண் சித்தர்களின் உண்மையான இந்து மதக் கருத்துக்களோடு ஒத்துப் போகாதவை போலத் தெரியும் அதாவது, உருவ வழிபாட்டைக் கண்டித்தல், தீ வளர்த்து செய்யும் பூசையைக் கண்டித்தல் பலிகொடுத்துப் பூசை செய்வதை மறுத்தல் பல தெய்வ வழிபாட்டை மறுத்தல், சித்தர்கள் வகுத்த 48 வகைக் குலங்களை மறுத்து ஒன்றே குலம் என்று கூறுதல், சித்தர்கள் பட்டியலிட்டுக் காட்டுகின்ற முப்பத்து மூவாயிரங் கோடி தேவர்கள், ஆயிரங்கோடி தேவதைகள், 243 ஆயிரங் கோடி தேவியர்கள் 48 ஆயிரங் கோடி இருடிகள், 96 ஆயிரங்கோடி கணங்கள், 108 ஆயிரங்கோடி முனிவர்கள்,..........என்ற பட்டியல் முழுவதையுமே மறுத்து ஒருவனே தேவன் என்று கூறுதல்; பதினெண் சித்தர்கள் உருவாக்கிய 108 திருப்பதிகளையும், 243 சக்தி பீடங்களையும் 1008 சிவாலய பீடங்களையும் கணக்கற்ற 48 வகைக் கருவறைகளையும், மறுத்து வழிபாட்டு இடம் என்று எதுவும் தேவையேயில்லை என்று கூறுதல்.........முதலியவற்றைக் கூறலாம். இவை அனைத்தும் உண்மையிலேயே பதினெண் சித்தர்களின் இந்துமதத்திற்கு மறுப்பானவையோ, வெறுப்பானவையோ, எதிர்ப்பானவையோ, எதிர்ப்பானவையோ அல்ல! அல்ல! அல்ல! அதாவது; இந்து மதத்திற்குட்பட்ட 48 வகைச் சித்தர்களின் தத்துவங்களில் நவநாத சித்தர்கள் என்ற ஒரு பிரிவினரின் தத்துவமே, மேலே குறிப்பிட்ட திரு மூலரின் கருத்துக்கள்.

எனவே பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றிடும் பொழுது தான் 48 வகைச் சித்தர்களின் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப கூறப்படும் கருத்துக்களையும் ஒரு முகப்படுத்தித் திருத்திப் பதினெண் சித்தர்களின் அண்ட பேரண்டங்கள் ஆளும் இந்து மதத்தின் மெய்யான, முறையான, முழுமையான, வடிவமைப்புக்கள் உருவாக்கப்படும், எனவே, பதினெண் சித்தர் பீடாதிபதிகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய காலத்தில் உள்ள குறைகளுக்கும் முறைகேடுகளுக்கும், தவறுகளுக்கும், பிழைகளுக்கும், தேய்வுகளுக்கும், ஓய்வுகளுக்கும், திரிபுகளுக்கும், முறிவுகளுக்கும்;.........உரிய பரிகாரங்களைச் செய்வதற்காகவே மீண்டும் குருபாரம்பரியமும், இலக்கிய பாரம்பரியம் அரசபாரம்பரியம், கருவாக்கியம், கருவாசகம்; குருவாக்கியம்; குரு வாசகம், தரு வாக்கியம், தரு வாசகம், திரு வாக்கியம் திருவாசகம், அருள் வாசகம், மருள் வாசகம்,.........முதலிய பல வகைப்பட்ட இலக்கியங்களைப், படைத்து ஏட்டுலகப் புரட்சியைச் செய்ய ஏற்படுகின்றது. இதைப் போலவே, பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தங்கள் தங்கள் காலத்து மக்களுடைய அறிவு ஆர்வம், ஆற்றல், உழுவலன்பு உண்மை ஊக்கம், நம்பிக்கை, பத்தி முயற்சி நிலை, பயிற்சி நிலை.........முதலியவைகளுக்கேற்ப மக்களிடையே, பலரைத் தேர்ந்தெடுத்து இட்டும் தொட்டும், சுட்டியும், அருள் வழங்கி சித்தரடியான்கள், சித்தரடியாள்கள்; சித்தரடியார்கள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், விருப்பாளர்கள், நம்பிக்கையாளர்கள், பதிலிகள், மகன்கள், மாள்கள், குருவழிவாரிசுகள் உரிமைச் சுற்றங்கள்.........எனப்படும் அருளுலக வாரிசுகளை உருவாக்கி நாட்டு நடப்பில் நாட்டுலகப் புரட்சியை [நாட்டு நடப்பில் புரட்சியை] செய்கிறார்கள். இவற்றைப்புரியாதவர்கள், புரிந்து கொள்ள முடியாதவர்கள், நாத்திகர்கள் மதமறுப்பாளர்கள் மத வெறுப்பாளர்கள் ........முதலியோர் பதினெண் சிதத்ர்கள் தோற்று வித்தது தான் இந்து மதம் என்ற பேருண்மையைத் தெரிந்து கொள்ள முடியாதவர்களாகவே ஆகிவிடுகிறார்கள் எனவே தான் அவர்கள் பதினெண் சித்தர்களின் உண்மையான இந்து மதத்திற்குள் 48 வகைச் சித்தர்களின் கருத்துக்களை மோதவிட்டு குழம்பித் தவிப்பார்கள் இப்படித் தான் திருமூலரையும், திருவள்ளுவரையும் பதினெண் சித்தர்களின் இந்து மதத்திற்கு மாறானவர்களாகவும், வேறானவர்களாகவும் எதிரானவர்களாகவும், சீர்திருத்த வாதிகளாகவும்......... கருதிடும் தவறான கருத்து பிறந்தது

எனவே திருமூலரும், திருவள்ளுவரும் கூறும் கருத்துக்கள் பதினெண் சித்தர்களின் இந்து மதத்திற்குட்பட்டவையே தான் அதாவது ஒரே ஆறிலிருந்து பிரியும் 48 வகையான சிற்றாறுகள், 48 வகையான வழிகளில் ஓடி வகை வகையான பயிரினங்களை விளைவிப்பது போன்றதாகும். அனைத்துப்பயிரினங்களும் உயிரினங்களின் நலவாழ்வுக்கும், வாழ்வின் வளர்ச்சிக்கும் பயன்படுபவையே ஆகும், இது போலவே 48 வகை சித்தர்களும தங்கள் தங்களின் சொந்த விருப்பு வெறுப்புகளுக் கேற்ப கூறுகின்ற கருத்துக்கள் அனைத்தும் உருவாக்கும் அருட் பயிரினங்கள் இந்து மதத்தின் நலவாழ்வுக்கும், வளர்ச்சிக்குமே பயன்படுகின்றன' பயன்படுகின்றன! பயன் படுகின்றன!

[முற்றும்]



# இந்தியாவில் மார்க்சீயம் - 6

—சித்தர்

அவரை வறுமையும் பிணியும் துரத்திக் கொண்டிருக்கும் பொழுது 'நியுயார்க் தின அழைப்பு' செய்தியேட்டிற்கு 'செர்மனியில் புரட்சியும் எதிர்ப் புரட்சியும்', 'இந்திய சீன விடுதலை இயக்கங்கள்', 'சிபெயின் புரட்சிப் போர்', 'கிரிமியாப் போர்'; இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி முதலிய நாடுகளின் அரசியல் பொருளாதாரச் சிக்கல்களும் தொழிலாளி முதலாளித்துவ வர்க்கப் போர்களும்........ என்னும் தலைப்புகளில் பலகட்டுரைகள் தொடர்ந்து எழுதினார் ஏங்கல்சும் இவரோடு சேர்ந்து பலகட்டுரைகள் எழுதினார்.

கார்ல் மார்க்சு தனது சிந்தனை வேகத்தை ஊக்கி 1851 டிசம்பர் – 1852 மார்ச்சு மாத கால இடைவெளியில் லூயி போனபர்த்தின் 18 வது புருமேர்' என்ற தலைப்பில் ஒரு நூலாக எழுதினார் இது அமெரிக்காவில் அச்சரிக்கப்பட்ட புரட்சி' என்ற செர்மானியக் கம்யூனிசிட்டு ஏட்டில் 1852 மே யில் வெளியிடப்பட்டது இதுவரை இவருக்கு இருந்த செல்வாக்கை இது சற்று உயர்த்தியது எனலாம், பின்னர் அக்டோபர்-டிசம்பர் மாதங்களில் இவருக்கு ஒரு சிறப்பான தொரு அனுபவ அறிவு கிட்டியது முன்பு மிதவாதிகளின் போக்கால்' கம்யூனிசிட் லீகின் தலைமை யிடத்தை கோலோனுக்கு மாற்றியபின்; பிரசிய அரசாங்கம் அவ்லீகின் மத்திய கமிட்டி உறுப்பி -னர்கள் பதினொரு பேர்களை கைது செய்து அவர்கள் மீது சதி வழக்கைத் தொடர்ந்தது அதை எதிர்த்து கார்ல் மார்க்சு கடுமையாக உழைத்தார் பதினெட்டு மாதங்கள் கழித்தே வழக்கு எடுக்கப்பட்டு ஒரு மாதம் நடைபெற்றது, நான்கு பேர்களைத் தவிர ஏழு பேர்களுக்குத் தண்டனை கிடைத்தது. கார்ல் இருபது மாத காலம் அயராது விவரங்களைச் சேகரித்துத் கொகுத்து 'கோலோன் கம்யூனிசிட்டு வழக்கு பற்றிய உண்மைகள்' என்ற நூலாக எழுதினார். இது 1853 சனவரியில் அச்சாயிற்று.

ஆனால், கட்சியின் உள் வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் தொடர்ந்து சலிப்பும் வெறுப்பும், தோல்வியும் ஏற்பட்டதால் 1852 நவம்பர் 17-ஆம் தேதியன்று கம்யூனிசிட்டு லீகினைக் கலைத்தார். மார்க்சு தன்னை முழுமையாகப் படிப்பதிலும், புதிய' வரலாற்றுப் படைப் பான 'மூலதனம்' என்ற நூலுக்குக் கருத்துக்களைத் தொகுப்பதிலும் ஈடுபடுத்திட்டார் இருப்பி'' னும் 1857-(சனவரி-டிசம்பர்) ஆம் ஆண்டைக் குடியரசுத் தத்துவ நோக்கு ஏடான 'புதிய ஓடர் ஏடு' இவரது பொறுப்பில் இயங்கிற்று இதில் 'கிரிமியாப் போர்' 'பிரான்சு இங்கிலாந்து நிலைகள் ......பற்றிப் பல கட்டுரைகள் எழுதினார்கள். இவைகள் உலகக் கண்ணோட்டத்தில் சிறப்பான வர வேற்பைப் பெற்றன, எனவே 1857 சனவரி, மே முடிய ஐந்து மாத காலம் 'சீனாவில் பிரிட்டிசு காலனி' அடக்கு முறைக்குக் கண்டனமாக 'நியுயார்க் தினவேட்டில் எழுதினார் பிறகு 1857 சூன் முதல் 1858 செப்டம்பர் முடிய சீனாவையும், இந்தியாவையும் பற்றியப் பலகட்டுரைகள் எழுதினார் இவை உலகக் கண்ணோட்டத்தில் கார்ல் மார்க்சின் பரந்த அறிவும், ஆராய்ச்சித் திறமும் உயர்ந்த மதிப்பீட்டைப் பெறச் செய்தன.

இவரின் கட்டுரைகள் பெரிதும் அமெரிக்க மக்கள் விரும்பினர் அமெரிக்கா கார்ல் மார்க் -சைப் பெரிதும் மதித்து அமெரிக்கப் புதியக் கலைக் களஞ்சியத்திற்குக் கட்டுரைகள் எழுதும்படி வேண்டிற்று இதே காலத்துத்தான் 'மார்க்சு' அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய விமர்சனத் திற்கு ஒரு செய்திக் கொடை என்ற நூலுக்கு முன்னுரை எழுதினார். இவ்வளவு பணியும் எப்படிப் பட்ட அல்லலுக்கும் இடருக்கும் இடையில் செய்தார் என்பதை சிலநினைவுகளை நினைவு கூர்கின்ற போதுதான் உணர இயலும், இங்கிலாந்தில் அகதிகளாக வந்தவர்களின் நிலைமைக்கு இவர் களின் வாழ்வு ஒருமுன் மாதிரியாக திகழ்ந்தது.

மார்க்சின் குடும்ப வறுமையை எப்படிப் படம் பிடிக்கலாம் என்றால் மார்க்சு எங்கல்சுக்கு எழுதிய கடிதமொன்றில்.........'என் மனைவி கண்ணீரும் கம்பலையுமாகச் செலவழித்த இரவுகளைக் கண்டு சகிக்க முடியவில்லை'.... ...என எழுதியுள்ளார். மேலும் பிள்ளைகள் தொடர்ந்து பிறந்த வண்ணம் இருந்ததால் சென்னியின் உடல்நிலையும் மிகவும் இரங்கத் தக்கதாக இருந்து வந்தது. அவர் கடன் தொல்லையால் மிகவும் அதாவது பூர்ச்சுவளச் சேற்றில் கழுத்து வரை மூழ்கிப் போயிருந்தார்!......! ஆனால் அவர் மீதுள்ள குற்றச் சாட்டோ தொழிலாளர்களைச் சுரண்டு -வதாயும் சர்வதிகாரம் வருவதற்கு முயலுவதாகவும்.........மற்றொரு இடத்தில் அவர் குறிப்பிடும் போது 'கடந்த வாரம் முதல் குடும்பத்தாருக்கு உருளைக் கிழங்கும் ரொட்டியும் கொடுத்து வருகிறேன்.

(தொடரும்)

## மெய்யான இந்து மதமும் போலியான ஹிந்து மதமும் வரிசையில்........

## அருணகிரியார் வரலாற்றில் பொய்யான ஹிந்து மதத்தின் ஆபாசக் கற்பனை

"அருணகிரியார் பெண்ணின்பத்தை அதிகமாகத் துய்த்து தொழுநோய் வந்து; தற்கொலை செய்து கொள்ள முயன்று; முருகப் பெருமானால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டே ஞானியானார்"... என்று (பிற+மண்ணினர்) பிருமணரால் ஒரு வரலாறு கூறப்பட்டு வருகிறது. இது முற்றிலும் தவறான சூழ்ச்சியான, மோசடியான வரலாறாகும். அதாவது பல்லாயிரக்கணக்கான அருட்பாக்களைப் பாடிய மாபெரும் அருட்கவிஞரான அருணகிரியாரை அவமானப் படுத்துகின்ற முறையில்(அ) இழிவு படுத்துகின்ற முறையில் பிருமணர்கள் மேற்படி வரலாறை கற்பனையாக பரப்பியிருக்கிறார்கள். இம்மாபெரும் உண்மையை கண்டப்பக கோட்டைச் சித்தர் ஏளனம் பட்டியார் உ. இராமசாமிபிள்ளை அவர்கள் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். இதனை தமிழுலகம் உணர்ந்தும், உணர்த்தியும் செயல்பட்டால் தான் மெய்யான இந்து மதம் பிழைக்கும், தழைக்கும்.

முதற்சங்க காலத்தில் வாழ்ந்த சிவகவி என்பவர்; "சிவபெருமானைத் தான் பாடுவேன்" "கோழியைப் பாடிய வாயால் முட்டையைப் பாடமாட்டேன்". "அப்பனைப்பாடிய வாயால் ஆண்டிச் சுப்பனைப் பாடமாட்டேன்"......என்று மிகப் பிடிவாதமாக சிவனைத் தவிர மற்ற கடவுள்களைப் பாட மறுத்து வாழந்தார். இவரைப் போலவே தான் சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த அருணகிரியார்; "முருகனைத் தான் பாடுவேன், வேறுயாரையும் பாடமாட்டேன்" என்று பிடிவாதமாக வாழ்ந்தார், அவருக்கு வழக்கம் போல் சிவபெருமான் பல சோதனைகளை வழங்கினார். அவற்றின் எல்லையாகத் தான் அருணகிரியார் தான் வணங்கும் முருகன் தன்னைக் காப்பாற்றுவான் என்று கூறி திருவண்ணாமலை கோபுரத்தின் உச்சியில் இருந்து கீழேகுதித்து தற்கொலை செய்து கொள்ளும் முயற்சி நிகழ்ந்தது இது தான் உண்மை இது வல்லாமல் அவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்துகொள்ள முயன்றுதான் கோபுர உச்சியிலிருந்து குதித்தார் என்று கூறுவது தவறு அப்படிக் கூறுவது தான் பொய்யான "**ஹிந்து மதம்**"

அருணகிரியாரை இழிவுபடுத்துவதன் நோக்கம் மெய்யான இந்து மதத்தைச் செயலற்றதாக ஆக்க வேணடும் என்ற பிருமண சூழ்ச்சியேயாகும். இதனை உணர்ந்து இனிமேலாவது தமிழர்கள் அருணகிரியாரைப் பற்றிய மெய்யான வரலாற்றை பரப்புவதன் மூலம் தான் மெய்யான "**இந்து**" மதததைக் காப்பாற்ற முடியும் அதாவது பிருமணர்கள் மெய்யான இந்து மதத்தைப் பற்றிய தவறான கருத்துக்களையும். செய்திகளையும், வரலாறுகளையும் உருவாக்கியதன் மூலம்தான் மெய்யான இந்துமதத்தின் அரிய தன்மைகளையும், பெருமைகளையும், சிறப்பான பயன்களையும, பகுத்தறிவுக் கொத்த நிலைகளையும், விஞ்ஞானப் பூர்வமான தத்துவங்களையும். பாழாக்கினார்கள், பாழாக்கினார்கள்!! பாழாக்கினார்கள்!!! குறிப்பாக சொல்லவேண்டுமானால் மெய்யான இந்துமதம் பதினெண் சித்தர்களின் வரலாறுகளையும் வாழ்வியல்களையும். சாதனைகளையும், போதனைகளையுமே அப்படியே உள்ளீடாகவும், வடிவமைப்புக்களாகவும் கொண்ட ஒன்றாகும். இந்த மெய்யான இந்து மதத்தைச் சிதைத்துச் சீரழித்தால்தான் தங்களுக்குப் புதுவாழ்வும் நிலையான வாழ்வும் இந்தியாவில் உண்டு என்று முடிவெடுத்தே செயல்பட்டு வருகிறார்கள் பிருமணர்கள். எனவேதான், 'பிருமண மறுப்பும் எதிர்ப்பும் தான மெய்யான இந்து மதத்தை **மறுமலர்ச்சி அடையச் செய்யும்**' என்ற கருத்தை உருவாக்கினார் சித்தர் ஏளனம் பட்டியார் ஆனால் கண்மூடித்தனமான பிருமண வெறுப்போ ஒழிப்போ ஏளனம் பட்டியாரின் கருத்தல்ல. அதாவது பிருமணர்களையும திருத்தி மெய்யான இந்துமதத்தால் அவர்களும் நன்மையடையும்படி செய்யவேண்டியதுதான் 'இந்து மறுமலர்ச்சி இயக்கக் கொள்கை.'

# இந்து மதம் - ஹிந்து மதம் - விளக்கக் கட்டுரை
# தொடர் - 6

இந்த உயிர்ப் போராட்டம் உயர் போராட்டமாக இருந்தும், வளவளர்ச்சியோ வலிமைப்பொலிவோ, ஆட்சி செல்வாக்கோ பெறமுடியாமல் இருப்பதற்கு காரணம் இன்றுள்ள இந்துக்களுக்கு, "மெய்யான இந்துமதத்திற்கும் பொய்யான ஹிந்து மதத்திற்கும் உள்ள வேறுபாடு தெரியாததால்தான்" மேலும், இன்றுள்ள இந்துக்கள் பிருமணத் தலைவர்களையே, இந்துமதத் தலைவர்களாக, நினைக்கிறார்கள். பிருமண மொழியான சமசுக்கிருத மொழியையே இந்துமத அருளாட்சி மொழியாகக் கருதுகிறார்கள், பிருமண வடஆரிய வேதமத சாத்திரச் சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் பூசாவிதிகளையும், மந்திரங்களையுமே, இந்துமத மந்திரங்கள் என்று நம்பி விரும்பியேற்றுச் செயல்படுகிறார்கள் இவற்றிற்கெல்லாம் மேலாக பல அரை குறை மதச் சீர்திருத்தவாதிகள் பகுத்தறிவின் பெயரால் பிருமணரின வேதமதமான பொய்யான ஹிந்து மதத்தின் புராண இதிகாச சாத்திரச் சம்பிரதாயச் சடங்குக் குப்பைகளை, மெய்யான இந்துமதத்துக்குரியது என்றெண்ணி தேவையற்ற போராட்டத்தில் வெறுப்புப்பணியில் மறுப்புப்பணியில், எதிர்ப்புப் பணியில், ஈடுபட்டு வருகிறார்கள். அதாவது, சமசுக்கிருத வெறுப்பு பிருமண வெறுப்பு, மூடநம்பிக்கை வெறுப்பு, பழமை வெறுப்பு, மத வெறுப்பு...... முதலிய உணர்ச்சிகளெல்லாம் உலக வரலாறு, இந்திய வரலாறு, தமிழ்மொழி வரலாறு, தமிழின வரலாறு, மெய்யான இந்துமத வரலாறு முதலியவைகளை முறையாகவும், நிறையாகவும், தெரியாதவர்களால் நிகழத்தப்படுவதால் தமிழுக்கும், தமிழினத்துக்கும் அருளுலகுக்கும், மிக மிகப் பெரிய பாதிப்புக்களே ஏற்படுகின்றன. எனவேதான் இந்து மதத்தையும், ஹிந்து மதத்தையும் பிரித்து வேறுபடுத்தி விளக்க வேண்டி கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

## வேதங்களும் இந்து - ஹிந்து மதங்களும்

பதினெண் சித்தர்கள் உருவாக்கிய நான்கு வேதங்களின் பெயர்களிலும் நான்கு சமசுக்கிருத வேதங்களை உருவாக்கிக் கொண்ட பிருமணர்கள் முழுக்க முழுக்க தங்களுடைய வேதமதத்தை அதாவது, பொய்யான ஹிந்து மதததை மெய்யான இந்துமதமாகவே மாற்ற முயற்சித்தார்தள் அதற்காக பதினெண் சித்தர்கள் ஏற்படுத்திய வழிபடு நிலையினர்கள், வழிபாட்டு நிலையங்கள் பல்வேறு வகை அருளாளர்கள், பலவகைப்பட்ட அருளுலக நூல்கள் ......முதலிய அனைத்தையுமே இருட்டடிப்புச் செய்யவும், குழப்பவும், கலக்கவும், பலபுதிய கதைகளையும், புராண இதிகாசங்களையும், போலிநூல்களையும், போலி வரலாறுகளையும், உருவாக்கினார்கள் இதனால்தான் அவர்கள் தங்கள் முயற்சியில் வெற்றி பெற்றார்கள் மேலும், இம்மண்ணுலகின், முதல் இனமாகவும் மூத்த இனமாகவும், இருக்கின்ற தமிழினம் மிக எளிதில் பிறருக்கு ஆதரவும், உதவியும், பாதுகாப்பும் மதிப்பும, வழங்கக்கூடிய பண்பு உடையது என்பதனால் பிருமணர்கள் மிகஎளிதாக இந்து சமயத்திலும், சமுதாயத்திலும முதன்மையான தலைமையிடத்தைப் பெற்றுக் கொண்டுவிட்டார்கள். இவற்றினமூலம், ஆட்சியிலிருப்பவர்களை எப்போதும் தங்களுடைய ஆதரவாளர்களாகவே இருக்கும்படி செய்துவிட்டார்கள்.

எனவே தான் பத்தாவது, பதினோராவது பதினென் சித்தர் பீடாதிபதிகள் எவ்வளவோ முயன்றும கூட நாடு தழுவிய வெற்றிகளைப் பெறமுடியவில்லை: பெற்ற வெற்றிகளைப் பொதுமக்கள் புரிந்து விரும்பி நம்பி ஏற்றுப் பயன் படுத்திக் கொள்ள வில்லை

[தொடரும்]

## II சிறப்புக் குறிப்பு

*விரிவஞ்சியும், அவசர அவசியம் கருதியும், இன்றைய மக்களின் மனநிலை கருதியும், வரலாற்றுப் பேருண்மைகளை அப்படியே சுருக்கமாக வழங்க எண்ணியுமே ஐயப்பன் வரலாறு. வாழ்வியல், தத்துவம், செயலியல்... முதலியவைபற்றிச் சிறப்புக் குறிப்புக்கள் எழுதுகிறோம்.*

*'சுமார் 500 ஆண்டு எல்லைக்குள் வாழ்ந்த கேரள நாட்டுப் பந்தள மன்னனுக்கும் அவனுடைய மூத்தமனைவிக்கும் பிறந்தவனே ஐயப்பன் அறுவை மருத்துவ முறையில் பந்தள மன்னனின் முதல் மனைவி பார்வதியின் வயிறு கிழிக்கப்பட்டு (அறுவை சிகிச்சையில்) எடுக்கப்பட்ட குழந்தையே ஐயப்பன். இம் மருத்துவ மகப்பேறில் பார்வதி இறந்து போனாள், மன்னனின் இரண்டாவது மனைவி கங்கை [கங்கா] கருவுற்றுக் **கோவிந்தன்** என்ற ஆண்மகவைப் பெற்றாள். இவள் தனது மகனுக்குப் பட்டம் கிடைக்க வேண்டும் என்பதற்காகச் செய்த சூழ்ச்சிகளைக் கருவில் திருவுடையானாகப் பிறந்த ஐயப்பன் வென்றிடுகின்றான்.நாட்டில் புதிதாகப் பரவத் தொடங்கிய இசுலாமிய ஆட்சியின் பெயரால் தோன்றிய முகம்மது யூசுப் என்ற கொள்ளைக்காரனைத் தனது அருளாற்றலால் திருத்திச் சமாது அடையச் செய்கிறான் ஐயப்பன் இறுதியாகச் சிற்றன்னை புலிப்பால் கேட்டதற்கு ஒரு புலிக் கூட்டத்தையே அழைத்து வந்து; தானோர் **'திருத்தோன்றல்'** [தேவகுமாரன், அவதாரம், அருளாளன்........] என்பதை மெய்ப்பித்தான் ஐயப்பன். அதன் பிறகே தனது சிற்றன்னையை மன்னித்து: அவள் மகன் கோவிந்தனுக்கு இளவரசுப்பட்டம் கட்டி விட்டுத் தனது முத்திக்காகக் கடுந்தவம் செய்யப்* **16 வயதிலே சபரிமலைக் -குச் சென்றான்.**

*18 வது வயதிலே அருட் பெருஞ்சோதியாக அனைவரும் காணச் சபரிமலைப் பதினெட்டாம்படிக் கருப்புகளின் அருட்கோட்டத்தில் நிறைந்தான். இவன், ஆண்டு தோறும் அருட்பெருஞ்சோதியாகத்!தோன்றி அருள் வழங்குகிறான்- மாதம் தோறும் பூசமீனின் நிறைவின போது அருட்கோட்டக் கருவறையில் அருட் பெருஞ் சோதி -யாகக் காட்சி தருகிறான். இவனது தந்தை பந்தள மன்னன் அரசசேகரன் வேண்டுகோளின் படி காக்கா வழியன் பண்ணையாடி, அமராவதி ஆற்றங்கரைச் சோழியாயி[சோழமாதேவி] கோயில் பூசாரி சித்தர் காகபுசுண்டர்[காக்கையர்] பரமசிவம் பிள்ளை மகனார் வீரபத்திரபிள்ளை சந்தன மரத்தால் ஐயப்பன் சிலை செய்து அருளேற்றிக் கொடுத்தார்.*

*அதனைத் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் வழிவந்தவரும்; அரியலூர்க் கோவிலூர் ஐயப்பன் கோயில் பூசாரியுமான சித்தர் கைகொட்டிநாதர் ஐந்தீ வேட்டல், முத்தீஓம்பல்........முறைகளில் சபரிமலைக் கருவறையில் 'வெட்ட வெளிக் கருவறை கொண்டருளு தேவன் ஐயப்பன்' என்று நிறுவிப் பந்தள மன்னன் மகன் ஐயப்பனுக்கு அருவுருவ சமாது ஆலயம்' நிறுவினார். இந்தச் சரவணபிள்ளை தான் தமிழ் விடுதூது பாடிய கவிஞர் என்பதாக இலக்கிய பாரம்பரியச் செய்தி கூறுகிறது. சோழ அரச குலத்து மன்னன் நாட்டரசன் பதவி இழந்ததால் ஏட்டரசனாகித் தமிழ் விடு தூது பாடிப் புகழுடம்பு பெற்றான். இவன் ஆலயங் -களை நிறுவும் வல்லியாக விளங்கியது போலவே: தமிழ் விடு தூது பாடியதன் மூலம் தமிழ்த் தாய்க்கும் ஓர் ஆலயம் நிறுவினான் —இவன் சபரிமலையில் நிறுவிய ஐயப்பன் ஆலயம் சந்தனம் அரைக்க அரைக்க மணப்பது போல் காலம் செல்லச் செல்ல; பத்தி செய்யச் செய்ய அருள் மணம் பரப்பும் இந்த ஆலயம் ஆண்டுக்கு ஒரு முறை தொழுகை செய்யப்படும் வெட்ட வெளிக் கருவறை ஆலய மென்பதைக் குருவாக்கிலும்; குருவாக்கியத்திலும். குருவாசகத்திலும், குருபாரம பரியத்திலும் காண்க —இலக்கிய பாரம்பரியக குறிப்பு]*

[தொடரும்]

# ஒன்பது கோள் பூசை விளக்கம்

பிருமணர்களுடைய பொய்யான ஹிந்து மதத்தில் ஒன்பது கோள் பற்றிய உண்மைகளை இவ்வாறு தவறாக கூறப்பட்டுள்ளன. இதன்படி நவக்கிரகங்களை வழிபட்டால் எந்தவிதமான பலனும் கிடைக்காது மெய்யான இந்து மதத்தில் கூறப் பட்டுள்ள ஒன்பது கோள் பற்றிய உண்மைகளை செயலிழக்கச் செய்வதற்காகத் தான் பிருமணர்கள் சூழ்ச்சி செய்து திரித்து தவறாக இவ்வாறு வெளியிட்டுள் ளார்கள். (வெளியீடு ஆதாரம்;- தர்மச்சுடர் டிசம்பர்—1985—பக்—5ல்)

பிறமண்ணினரான பிருமணர்கள் பொய்யான ஹிந்து மதக் கருத்துக்களை வெளியிட்டு வலியுறுத்தி மக்கள் நலத்துக்கு, துரோகமும், விரோதமும் செய்கின்ற நேரங்களில் தான் பாரம்பரிய மரபுகளையும், சட்டதிட்ட கட்டுப்பாடுகளையும் மீறி குவலய. குருகுலபீடம், இந்து மதத் தந்தை. ஞானாச்சாரியார், அரசயோகி, அண்ட பேரண்ட ஆதி சத்திகள் சன்னிதானம், தலைவர், குருதேவர் மெய்யான இந்துமதத் -தின (ரகசியங்களை) மறைகளை வெளியிடுகின்றார். இதனை இந்து மதத்தின், மூலவாகளாகவும். காவலர்களாகவும், நேரடி வாரிசுகளாகவும் இருக்கின்ற தமிழர்கள் உணர்ந்தும், உணர வைத்தும், புரிந்தும். புரியவைத்தும செயல்பட வேண்டும். இவ்வரிய பெரிய விழிச்சிப்பணியினை நம்மவர்களோ, பிருமணர்களோ அல்லது நாத்திகர்களோ. அல்லது வேற்று மதத்தவர்களோ, இன்றைய குருமகா சன்னிதானம ஞாலகுரு சித்தர் கருவூறார் அவர்கள் பிருமண எதிர்ப்பாகவும், மறுப் பாகவும், வெறுப்பாகவும் பகையாகவும், செயல்படுவதாக அல்லது கருத்துக் கூறுவதாக நினைத்து விடக்கூடாது! கூடாது! கூடாது! ஏனெனில் பிருமணர்களும் மெய்யான இந்து மதத்தை உணர்ந்து அதனை பயன் படுத்தி நன்மையடைய வேண் -டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் தான செயல்படுகிறார், இன்றைய இந்துமதத் தந்தை. அதுமட்டுமில்லாமல் இன்றுள்ள அனைத்து விதமான, மதப்பூசல்களையும் போட்டிப்பொறாமைகளையும், சண்டைசச் சரவுகளையும்முழுமையாக அகற்றுவதற்கு இம் மண்ணுலகின் மூல மதமாகவும், முதல் மதமாகவும், இருக்கின்ற மெய்யான இந்து மதத்தை மறுமலர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் தான செயல்படுகிறார்.

இன்றைய குருகுல பீடத்திற்கு. எந்தவிதமான மதவெறியோ, மறுப்போ வெறுப்போ கிடையாது! கிடையவே கிடையாது! மதத்தின் மூலம்தான் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, முதலிய அனைத்திலும நிறைவு, நிம்மதி, மகிழ்ச்சி, அமைதி, ஒற்றுமை, அன்பு. சமத்துவம், சகோதரத் தத்துவம், பொதுவுடமை.. ...விளைவிக்க முடியும்! விளைவிக்க முடியும்! என்பதுதான் பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் கருத்து! எனவே இந்து என்ற சொல்லும். மதம் என்ற சொல்லும் மனித வாழ்வின் கண்கள். இச்சொற்கள் அண்டபேரண்ட மாளும் அமுதத் தமிழில் உள்ள அழகுமிக்க, பொருளாழமிக்க, பயன்மிக்க, சொற்கள் என்பதனை அனைத்து மதத்தவர்களுக்கும் புரிய வைப்பதில்தான் வருங்கால சந்ததியினரின் வளமான வாழ்வு இருக்கிறது. எனவேதான் உலக மக்களின் நன்மைக்காக இந்துமதப் போலிநிலைகளையும், காலிநிலைகளையும், ஏமாற்று நிலைகளையும் அகற்றிட ஒன்பது கோள் பற்றிய பேருண்மைகளை இப்படி பட்டியல இட்டு வழங்குகிறார்.

—சித்தரடியார் திருக்கூட்டம்—

KVS பிரிண்டர்ஸ் பொன்னேரி.